முதல்வரின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்போம்! அவரது தொண்டுகளும் சேவைகளும் தொடர

2026-லும் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக வர வேண்டும்!

சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழாவில் இயக்குனர் எஸ்.பி.முத்துராமன் பேச்சு!

சென்னை, ஏப். 1-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவில் திரைப்பட இயக்குனர் எஸ்.பி.முத்துராமன் பேசுகையில், "முதல்வரின் சாதனைகள் தொடர வேண்டுமானால் 2026-லும் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் வரவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவில் இயக்குனர் எஸ்.பி.முத்துராமன் ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் - மக்கள் முதல்வர் அவர்களின் 72-வது பிறந்தநாளை, நம்முடைய சேகர்பாபு அவர்கள் 73 விழாக்களாக நடத்தி, நம்முடைய முதலமைச்சர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார். அந்த விழாவில், அவரை வாழ்த்துகிற வாய்ப்பு எங்களுக்கெல்லாம் தரப்பட்டதற்காக மகிழ்ச்சி அடைகிறோம்; பெருமை அடைகிறோம்.

இங்கே சிறப்பு விருந்தினராக வந்திருக்கும் இருவர், நம்முடைய இரண்டு கண்கள். அவர்கள் செய்திருக்கும் செயலை பார்க்கும்போது, இவ்வளவு முடியுமா? என்று கேட்கும் அளவிற்கு அவர்கள் செயல்களைசெய்திருக்கிறார்கள். நான் உலகத்தின் பல நாடுகளுக்கு சென்றிருக்கிறேன். பல பல்கலைக்கழகங்களைப் பார்த்திருக்கிறேன். ஜயா ஜெகத் அவர்களும், முனைவர் விஸ்வநாதன் அவர்களும், இரண்டு பல்கலைக்கழகங்களை நிறுவி,அந்தஇரண்டு பல்கலைகளுக்கும் துணைவேந்தராக இருக்கிறார்கள். உலகத்தில் சிறந்த பல்கலைக்கழகங்களாக அந்த இரண்டு பல்கலைக்கழகங்களும் இருக்கின்றன. இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் நான் சென்று பார்த்தபோது, அசந்து போயிருக்கிறேன். வெளிநாட்டில் பல்கலைக்கழகங்களை பார்த்த நான், இவர்கள் பல்கலைக்கழகங்களை பார்த்த பிறகு, நம்முடைய நாட்டிலும் இவ்வளவு பெரியபல்கலைக்கழகங்கள் இருக்கின்றனவே, அதை நடத்துகிற நம்முடைய ஜெகத் ஜயா அவர்களும், விஸ்வநாதன் ஜயா அவர்களும் பாராட்டப்படக் கூடியவர்கள்; மரியாதைக்குரியவர்கள்; நம் நாட்டின் கல்வியாளர்கள். அவர்கள் இருவருக்கும், இரண்டு கரம் கூப்பி நன்றியோடு வணங்குகிறேன், வாழ்த்துகிறேன்.

முதல்வரை
வாழ்த்த வந்திருக்கிறோம்!

உழைத்து ஒரு இடத்திற்கு வந்திருக்கும் நம்முடைய அய்யா ஸ்டாலின் அவர்களை வாழ்த்துவதற்காக வந்திருக்கிறோம். அவர் எப்படி எல்லாம் வந்தார்? எப்படி இந்த இடத்திற்கு வர முடிந்தது? உழைத்தால் வர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக,

'எண்ணிய எண்ணியாங்கு எய்து
எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்'

என்ற குறளைச் சொல்லி, என்ன நினைத்து, எந்த லட்சியத்தை நோக்கி நாம் நடக்கிறோமோ, அதில் உறுதியாக இருந்து - கடுமையாக உழைத்து - நாணயத்தோடு நடந்து - வாழ்க்கையின் லட்சியத்தை நிறைவேற்றுகிற தன்மை நம்முடைய ஸ்டாலின் அவர்களிடம் இருந்தது, இருக்கிறது. அதற்கு சாட்சிதான் இந்த விழாக்கள்.

ஸ்டாலினின் பிறப்பு எப்படி தெரியுமா? கலைஞர் அவர்கள், மெரினா கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில்பேசிக் கொண்டிருக்கிறார். அவரிடத்தில் ஒரு பேப்பரை கொண்டு சென்று கொடுக்கிறார்கள். அதை வாங்கி பார்த்துவிட்டு சொல்கிறார்.'இந்த நேரத்தில் எனக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான் என்ற செய்தியை உங்களிடத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அத்தனை ஆயிரம் மக்கள் மத்தியில் ஸ்டாலின் பிறந்த செய்தியை சொல்லி பெருமைப்பட்டார். எப்போதுமே கலைஞர் பெருமைப்பட்டத்தோடு விடமாட்டார். ஒரு நல்ல காரியத்தையும் செய்வார்.'என் மகனுக்கு இந்த மக்கள் முன்பேபெயர் வைக்கிறேன். அவனுடைய பெயர் ஸ்டாலின்' என்று கலைஞர் அவர்கள் அந்த மாபெரும் கூட்டத்தில் பெயர் வைத்தார்கள்.

தொண்டனாக இருந்து
தலைவராக வந்தவர்!

பெயர் வைத்ததன் ஆரம்பத்திலிருந்தே, எவ்வளவு கஷ்டங்கள் இருக்கிறது? எவ்வளவு துன்பங்கள் வருகிறது? அதை எல்லாம் எப்படி தாங்கிக் கொள்கிறார்கள்? என்பதற்காக உங்களிடம் சொல்கிறேன். ஸ்டாலினுக்கு மூன்று வயது ஆகிவிட்டது. அவரைக் கொண்டு சென்று பள்ளியில் சேர்க்கிறார்கள். அந்தப் பள்ளியில் சொல்கிறார்கள்,'ஸ்டாலின் என்ற பெயர் இருந்தால், நாங்கள் பள்ளியில் சேர்க்க மாட்டோம்.அந்தப் பெயரை மாற்றுங்கள். பள்ளிக்கூடத்தில் சேர்க்கிறோம்' என்று சொல்கிறார்கள். கலைஞர் சொன்னார்,'என் மகன் பெயர் ஸ்டாலின்.அவன் பெயரை மாற்ற மாட்டேன். பள்ளிக்கூடத்தை மாற்றுகிறேன்' என்று பள்ளிக்கூடத்தை மாற்றியவர் கலைஞர்.

கோபாலபுரத்தில் - கலைஞர் வீட்டில் ஸ்டாலின் வளர்ந்தார். எவ்வாறு வளர்ந்தார்?தலைவர்களோடுவளர்ந்தார்; பெரியார் கொள்கைகளோடு வளர்ந்தார்; பகுத்தறிவோடு வளர்ந்தார்; நம்முடைய திராவிட இயக்கத்திற்கு பாசறை, கோபாலபுரம் - கலைஞருடைய வீடுதான். எனவே, நம்முடைய ஸ்டாலினுக்கு கிடைத்த அதிர்ஷ்டம் என்ன என்று சொன்னால், அவர் கலைஞர் வீட்டு கூழலிலேயே வாழ்ந்ததால், நம்முடைய ஸ்டாலின் திராவிடராக - திராவிட குடும்பத்தில் ஒருவராக - வளரும்போதே கலைஞரோடு வளர்ந்த பெருமை, ஸ்டாலினுக்கு உண்டு. இந்த வளர்ச்சிக்கு காரணம், அந்த அஸ்திவாரம்.

இந்தப் பிள்ளை எப்படி வளர்கிறான் என்று கலைஞர் பார்த்துக் கொண்டே இருந்தார். வளர வளர படிப்பதை விட, நாடகத்தில் நடிப்பது - கதை எழுதுவது - பாட்டு எழுதுவது - விழாக்களுக்குச் சென்று பேசுவது, இவ்வாறு வாழ்ந்து - தலைவர்களோடும், அங்கு பெரியவர்களோடும் வாழ்ந்து, தன்னை முழுமையாக - திராவிட இயக்கத்தின் தொண்ட னிலிருந்து தலைவராக வரும் அளவிற்கு வளர்ச்சி பெற்றவர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கலைஞர், அவன் நிச்சயமாக பெரிய ஆளாக வருவான் என்று மனமார வாழ்த்திக் கொண்டே இருந்தார்.

கலைஞர் எதை எடுத்தாலும் சரி, அதில் ஒரு முத்தாரம் வைப்பது போன்று வேலையை செய்துவிட்டுதான் விடுவார். உலகமெல்லாம் வாழ்த்திய பெரிய பெரிய கலைஞர்களை எல்லாம் உருவாக்கியகலைஞர், தன் மகனை விட்டு விடுவாரா... எனவே தன் மகனை, கழகத்திற்கு ஒரு சிறந்த தொண்டனாக வளர்த்தார்.

எத்தனையோ செயலாளர்கள் இருக்கிறார்கள். சேகர்பாபு அழைப்பிதழில் போட்டிருக்கும் பெயர்களைப் பார்த்தாலே, திராவிட இயக்கத்தில் எவ்வளவு நிர்வாகிகள்? எவ்வளவு தொண்டர்கள்? எவ்வளவு செயலாளர்கள்? அவ்வளவு இருக்கிறது! எனவே, எந்த அளவிற்கு கழகம் நிர்வகிக்கப்படுகிறது? எப்படி நடத்துகிறார்கள்? என்பதன் தொண்டர்கள் - செயலாளர்கள் எல்லாம் சாட்சி.

தந்தையே குருவானார்!

எனவே, தன்னுடைய மகனை உடனே தூக்கிக் கொண்டு தலைவராக ஆக்கவில்லை. மாவட்டச் செயலாளராக - ஒவ்வொரு பகுதிச்செயலாளராக - இப்படி எல்லாம் படிப்படியாக வளர்த்து, சென்னை மாகாணத்தில் மேயராக ஆக்கி - அதன் பிறகு துணை முதல்வர் ஆக்கி - அதன் பிறகுதான் ஸ்டாலின் அவர்கள் முதல்வராக ஆகியிருக்கிறார். கலைஞருடைய மகன் என்பதற்காக அவரை தூக்கி கொண்டு உட்கார வைக்கவில்லை. ஒவ்வொன்றையும்சொல்லிக்கொடுத்து, எப்படிநடக்க வேண்டும்? எப்படி இருக்க வேண்டும்? எப்படி கற்றுக் கொள்ள வேண்டும்? எப்படி அரசியல்? அந்தக் கட்சியில் எப்படி நடக்கிறார்கள்? இந்தக் கட்சியில் எப்படி நடக்கிறார்கள்? என்று சொல்லி, தந்தையே குரு ஆனார்.ஸ்டாலின்அவர்களுடையதந்தையான கலைஞர் அவர்களே, ஸ்டாலினுக்கு குரு ஆனார்கள் என்பதை உங்களிடத்தில் மகிழ்ச்சியோடும், பெருமை யோடும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கழகம் வளர்வதற்கு
பக்க பலமாக இளைஞர் அணி!

அப்படி இருந்த ஸ்டாலின் அவர்கள், வளர்ந்து இயக்கத்துக்காக நாடகங்கள் நடத்தி - தமிழகம் எங்கும் சென்று பிரச்சாரம் செய்கிற ஒரு மனிதனாக இருந்தார். அந்த சமயத்தில் வளர்ந்து, வயதுக்கு வந்த பிறகு, இளைஞர் அணி என்று ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார். அதுவும் கலைஞர் வீட்டிலேயே இளைஞர் அணி ஆரம்பித்து, அந்த இளைஞர் அணி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பக்க பலமாக வரும் அளவிற்கு ஸ்டாலின் இளைஞர் அணியைசிறப்பாக உருவாக்கினார். இளைஞர்களை வைத்துஅந்தஇயக்கத்தை ஆரம்பித்து, தந்தைக்கு எந்தெந்த அளவில் உதவி செய்ய முடியுமோ- அந்தந்த அளவில் உதவி செய்து, திராவிட முன்னேற்றக் கழகம் வளர்வதற்கு பக்க பலமாக இருந்தவர், கலைஞரின் மகன் - நம்முடைய ஸ்டாலின் அவர்கள் என்பதை மகிழ்ச்சியோடும், பெருமையோடும் உங்களிடத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

தியாகங்கள் செய்து
இந்த இடத்திற்கு வந்தவர்!

எனவே, அந்த அளவிற்கு வந்த பிறகு,'மிசா'என்ற ஒன்று வந்தது.அவ்வாறுஒரு நடவடிக்கை எடுத்து, அனைவரையும் கைது செய்து கொண்டிருந்தார்கள். அப்போது கைது செய்வதற்காக கலைஞருடையவீட்டிற்கு காவல்துறை வந்தது. உடனே கலைஞர் கேட்டார்,'என்னை கைது செய்யப் போகிறீர்களா?' என்றார்.'ஜயா, உங்களை கைது செய்ய வரவில்லை. உங்களை மகன் ஸ்டாலினை கைது செய்ய வந்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். கலைஞர், 'அவன் பிரச்சாரத்திற்காக வெளியே சென்றிருக்கிறான். நாளை காலையில் வந்துவிடுவான். அவ

வாறு வந்தவுடன் நானே தொலைபேசியில் உங்களுக்குசொல்கிறேன். நீங்கள் நாளை காலையில் வந்து அவனை அழைத்துச் செல்லலாம்' என்று பெற்ற தந்தையே காவல்துறையில் பிடித்துக் கொடுப்பதற்கு தயாராக இருந்தார். அதுதான் ஸ்டாலினுக்கு கிடைத்ததந்தை.

மறுநாள் காலையில் ஸ்டாலின் வருகிறார். ஸ்டாலினிடம் விஷயத்தை சொல்கிறார் கலைஞர். எனவே, இப்பொழுது காவல்துறையை நானே போன் செய்து வர சொல்லப் போகிறேன். எனவே, ஜெயிலுக்கு செல்வதற்கு தயாராக இரு' என்றார். திருமணமாகி 5 மாதம்தான் ஆகியிருக்கிறது. அதற்குள் ஜெயிலுக்கு செல்ல வேண்டும் என்ற ஒரு நிலைமை - சூழல். எனவே, கலைஞரே காவல்துறைக்கு போன் செய்கிறார். காவல்துறை அதிகாரிகள் எல்லாம் வருகிறார்கள். அவ்வாறு வந்தவுடன்,'என் மகன் வந்து விட்டான். அழைத்துச் செல்லுங்கள்' என்று தந்தையே, போர்க்களத்துக்கு அனுப்புவதைப்போல, சிறைக்கு அனுப்பி வைத்தார் என்பதை உங்களிடத்தில் பதிவு செய்கிறேன்.

எப்படி எல்லாம் வந்தோம்? எப்படி எல்லாம் வாழ்ந்தோம்? எப்படி எல்லாம் சிறைக்குச் சென்றோம்? என்பதை உங்களுக்கு சொல்கிறேன். ஏனென்றால், அவ்வளவு தியாகங்கள் செய்த பிறகுதான் இந்த இடத்திற்கு வந்துசேர்ந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட ஸ்டாலினை அழைத்துச் சென்றார்கள். அந்த சிறையில் என்ன நடந்தது? என்பது ஜயா-விற்கெல்லாம் தெரியும். அவரை எவ்வாறெல்லாம் அடித்தார்கள்? எப்படி எல்லாம் பூட்ஸ் காலால் மிதித்தார்கள்? என்று நம்முடைய சரித்திரம் சொல்கிறது. அங்குசிட்டிபாபு என்ற தொண்டர் இல்லாமல் இருந்திருந்தால், அன்றைக்குஸ்டாலினை அடித்தே கொன்றிருப்பார்கள். எனவே, ஆரம்பமே அவருடைய வாழ்க்கை அடி வாங்குவதும் - சிறைக்குச் செல்வதும் - இப்படி தொண்டு செய்வதுமாக வாழ்க்கைஆரம்பித்தது.

மேயர் பதவி பறிப்பு!

அதன் பிறகு, அவர் மேயராகவும் - துணை முதல்வராகவும் வாழ்ந்தபோது, அதிலும் பல கஷ்டங்கள். அப்படி மேயராக இருக்கும் ஸ்டாலினுக்கு, துணை முதல்வராக அல்லது மேயராக இரண்டில் ஒன்று தான் இருக்க வேண்டும் என்று சொல்லி, ஒரு பதவியை ஒதுக்கி விட்டுவிட்டார்கள். எனவே, அவருக்கு கிடைத்த பதவியையும் பறித்துவிடும் ஒரு நிலைமை இருந்தது. அதையும் பொறுத்துக் கொண்டார். அவ்வாறு பொறுத்துக் கொண்டு, தன்னால் முடிந்தவரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியை நோக்கியே வாழ்ந்தார். அதன் மூலமாகத்தான் பல தேர்தல்களில் நாம் வெற்றி பெற்றோம்; பல தேர்தல்களில் இளைஞர்கள் நம்மிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

அவ்வாறு இளைஞர்கள் வந்துசேர்ந்த பிறகுதான், அன்பகத்தை நம்முடைய ஸ்டாலின் அவர்கள் வாங்கி, அங்கே இளைஞர்கள் எல்லாம் தி.மு.க.விற்கு பக்க பலமாக இருக்க வேண்டும்; இளைஞர் அணி தி.மு.க.விற்கு சகோதர அணி என்று சொன்னார்.

அந்த அன்பகத்தை யாருக்கு கொடுப்பது என்றுவந்தது. நம் இயக்கத்தில் பல பிரிவுகள் இருக்கிறது. அதில் எந்தப் பிரிவுக்கு கொடுப்பது? நம்முடைய பேராசிரியர் அவர்கள் இருக்கிறாரே... அவர் கல்லூரியில் மட்டும் பேராசிரியர் அல்ல; நம்முடைய கழகத்திற்கே பேராசிரியர் அவர்கள் தான். அவர் ஸ்டாலினை அழைத்து, 'அனைவரும் போட்டி போட்டு அன்பகத்தை கேட்கிறார்கள். நான் ஒரு முறை வைத்திருக்கிறேன். 10 லட்சம் ரூபாயை யார் முதலில் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு அன்பகத்தை கொடுக்கலாம் என்று கழகம் முடிவெடுக்கிறது.உன்னால் 10 லட்சம் ரூபாய் சேகரிக்க முடியுமா?' என்று கேட்டார்.'நிச்சயமாக சேகரித்துவிடுவேன்' என்று சொல்லி,ஸ்டாலின்அவர்கள்சேகரிப்பை ஆரம்பித்தார். அவர் செய்யாமல் இருப்பாரா?

கலைஞர் தீரட்டிய
11 லட்சம் ரூபாய்!

சட்டமன்றத் தேர்தல் வருகிறது. அப்போது கட்சியில் பணம் இல்லை. சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள், ஒவ்வொருவரிடமும் இவ்வளவு பணம் சேகரித்து கொடுக்க வேண்டும் என்று சொன்னபோது, கலைஞரைப் பார்த்து, 'நீ 10 லட்சம் ரூபாய்க்கு மேல்சேகரித்து கொடுக்க வேண்டும்' என்று சொன்னார். கலைஞர் அவர்கள், 'நிச்சயமாக செய்து கொடுப்பேன்' என்று சொல்லிவிட்டு, 11 லட்சம் ரூபாயை அந்த மாநில மாநாட்டில் கலைஞர் அவர்கள் சேகரித்து கொடுத்தார்.

கலைஞர், சட்டமன்ற உறுப்பினராக எம்.எல்.ஏ.விற்கு தேர்தலில் நிற்கும்போது, அண்ணா அனைவருடைய பெயரையும் யார் யார் எந்த தொகுதி என்று படித்துக் கொண்டிருக்கிறார். அப்போது கலைஞர் நிற்கிற தொகுதி வந்தபோது, கலைஞர் என்று சொல்லவில்லை.'11 லட்சம் ரூபாய்' அந்தத் தொகுதியில் நிற்கிறது என்றார். எனவே அண்ணா, அவரை பட்டப் பெயர் வைத்து அழைக்கும் அளவிற்கு அவர் பணி செய்தார்.

எனவே, தந்தை 11 லட்ச ரூபாய் கொடுக்கும்போது, மகன் 10 லட்ச ரூபாய் கொடுத்து அன்பகத்தை நம்முடைய பேராசிரியர் இடத்தில் வாங்கிக் கொண்டார் என்பதை உங்களிடத்தில் மகிழ்ச்சியோடு, பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதன் மூலமாகத்தான் கட்சிக்குள் வந்து, அன்பகத்தில் இளைஞர் அணியை வைத்து, படிப்படியாக வளர்த்து, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இளைஞரணி பக்க பலமாக இருந்தது - இருக்கிறது - இருக்கும் என்பதைச் சொல்லி, அந்த இளைஞர் அணியை நாம் உளமார பாராட்டுகிறேன்.

துணை முதல்வர்
பதவி!

நம்முடைய கலைஞர் அவர்கள், அவருக்கு நிச்சயமாக துணை முதல்வர் பொறுப்பு கொடுக்கலாம் என்று முடிவு செய்து, அதுவெறும் மகனுக்காக அல்ல; ஸ்டாலினிடமிருந்த திறமைக்காக அந்தப் பொறுப்பை கொடுத்தார்கள்.

'இதனை இதனால் இவன்முடிக்கும்
என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்று வள்ளுவர் சொல்வார். இந்தக் காரியத்தை இவன் முடிப்பான் என்று தெரிந்து, அந்தக் காரியத்தை அவனிடத்தில் கொடுக்க வேண்டும். கலைஞர் அதைத்தான் செய்தார். ஸ்டாலினை படிப்படியாக வளர்த்து, இவன் இந்தக் காரியத்தை செய்வான் என்று உணர்வுப்பூர்வமாக தெரிந்து கொண்டு, அந்தப் பொறுப்பினை நம்முடைய ஸ்டாலின் அவர்களிடத்தில் கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடும், பெருமையோடும் உங்கள் முன்னால் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

'கலைஞர்கள்' என்ற
மரியாதை!

கழகத்துக்கு வந்து, நாடகங்கள் நடித்தபோது, முதல் முதலில் அவர் நடித்த நாடகம், 'ஒரே ரத்தம்'. அந்த நாடகமே ஜாதி - உயர்வு - தாழ்வு எல்லாம் வைத்து செய்யும் அந்த நாடகத்தில், நந்தகுமார் எந்த கதாபாத்திரத்தில், கதாநாயகனாகவும் ஸ்டாலின் அவர்கள் நடித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பல தொலைக்காட்சிகளில் - பலசினிமாக்களில் நடித்து, கலைத்துறைக்கும் அவர் எங்களுக்கு தொண்டு செய்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரையுலகத்தில், சினிமா மூலமாக எங்களுக்கு பல உதவிகளையும் - பல விருதுகளையும் கொடுத்து, எங்களைப் போன்ற சினிமாக்காரர்களுக்கெல்லாம் என்ன பெயர் தெரியுமா? 'கூத்தாடி' என்ற பெயர். திராவிட முன்னேற்றக் கழகம் வருகிற வரையில் - அண்ணா வருகிற வரையில் - கலைஞர் வருகிற வரையில் - நாடகங்களில் பங்குபெற்ற எங்களுக்கு எல்லாம்,'கூத்தாடி' என்று பெயர். அண்ணாவும் - கலைஞரும் வந்தபிறகுதான், நாங்கள் எல்லாம் 'கலைஞர்கள்' என்று போற்றப்பட்டோம். எங்களுக்கு ஒரு மரியாதை கிடைத்தது என்பதை உங்களிடத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பகுத்தறிவைப் பரப்ப
கழகம் துணையாக இருந்தது!

கழகத்துக்காக நாங்கள் பாடுபட்டோம். எங்களுடைய வளர்ச்சிக்காக கலைஞர்கள் பாடுபட்டார்கள். அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் - திரைத்துறைக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. இருவரும் ஒருவருகொருவர் கொள்கைகளை வளர்த்தோம்; பகுத்தறிவை சுயமரியாதையை பரப்பினோம்; அப்படி பரப்புவதற்கு கலையுலகம், திராவிட முன்னேற்றக் கழகம் துணையாக இருந்தது. எங்களுக்கு கொடுக்கப்பட்ட விருதுகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தால் கொடுக்கப்பட்டது.

எனக்கு துணையாக நாசர் அவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள்.... எனவே அப்படிப்பட்ட நாசர் அவர்களும் நானும் சேர்ந்து, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் - கலையுலகத்துக்கும் விருதுகளையும், வேண்டிய உதவிகளையும் செய்த தலைவனுக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, நம்முடைய ஸ்டாலின் 72-வது வயதில், எங்கள் சார்பில் அவரை வாழ்க - வாழ்க, தொடர்ந்து உங்கள்பணி... என்றுநான் வாழ்த்துகிறேன்.

100 வருடம் ஒரு இயக்கத்தை நடத்தி - பலமுறை ஆட்சியில் இருந்து - இன்றைக்கும் ஆட்சியில் உட்கார்ந்து கொண்டு - என்னென்ன மக்களுக்கு செய்யலாம்? என்ன செய்ய முடியும்? என்று போராடிக் கொண்டிருக்கிறோம் - போற்றிக் கொண்டிருக்கிறோம் என்றால், அதற்கு காரணம் இந்த இயக்கம்தான்.

முதல் முறையிலேயே
இவ்வளவு சாதனைகள்!

நம்முடைய ஸ்டாலின் முதலமைச்சராக இருக்கும் இந்த ஆட்சி, இந்த 5வருட காலத்திற்குள் என்னென்ன செய்திருக்கிறது தெரியுமா? ஸ்டாலின் அவர்கள் என்னென்ன பணிகளை மக்களிடத்தில் கொண்டு சென்று சேர்த்திருக்கிறார் தெரியுமா? பெண்களுக்கு பேருந்தில் இலவசப் பயணம். அதற்கு காரணம் ஸ்டாலின் அவர்கள். பெண்களுக்கு மாதாமாதம் 1,000 ரூபாய், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கொடுக்கப்படுகிறது. என்ன செய்கிறோம்? என்னென்ன செய்ய முடியும்? இது ஆரம்பம். இதுதான் நம்முடைய ஸ்டாலினுக்கு முதல் டெர்ம். முதல் டெர்ம்-லேயே இவ்வளவு செய்துவிட்டார். அடுத்து, பெண்கள் சொத்து வாங்கினால், பதிவுக் கட்டணத்தில் அவர்களுக்கு ஒரு சதவிகிதம் குறைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய ஸ்டாலின் முதல் முறையிலேயே இவ்வளவு சாதனை செய்திருக்கிறார்.

இன்னொரு பெரிய சாதனை சொல்லட்டுமா... பள்ளிக்கு வரும் மழலைகளுக்கு,'காலை உணவு' தமிழ்நாடெங்கும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் வீட்டில் செய்ய முடியுமோ? செய்ய முடியாதோ? தெரியாது. பசியோடு வருகிறார்கள். அந்தப் பிள்ளை பசியோடு உட்கார்ந்திருக்குமா? பசியோடு படிக்குமா? படிக்க முடியுமா? இன்றைக்கு பள்ளிக்கு வரும் அத்தனை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கப்படுகிறது;நம்முடைய ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்கள். எனவே, இது போன்ற விஷயங்கள் நிறைய செய்திருக்கிறார்.

எனவே, இவ்வளவு விஷயங்களையும் முதல் முறையிலேயே சாதனையாக செய்திருக்கும் நம்முடைய மரியாதைக்குரிய ஸ்டாலின் அவர்கள், மீண்டும் முதலமைச்சராகி பல காரியங்களையும் செய்ய வேண்டும்.

இப்போது மொழிக் கொள்கையில், நாங்கள் இரண்டு மொழி தான் வைப்போம் என்று உறுதியாக இருக்கிறார். நம்முடைய எம்.பி.க்களின் எண்ணிக்கை குறைந்து விடும் அளவில் இருக்கிறது. அது குறையாமல் இருப்பதற்காக, ஸ்டாலின் டெல்லிக்கு செல்லவில்லை. மற்ற மாநிலங்களில் இருக்கும் முதலமைச்சர்களை எல்லாம் சென்னைக்கு அழைத்து, அவர்களின் தலைமையில் என்ன செய்யலாம்? எப்படி செய்யலாம்? என்று விவாதிக்கும் அளவிற்கு, தன்னை இந்தியாவின் தலைவராக ஆக்கிக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே, அவரை நாம் வாழ்த்துகிறபோது, பெரியாரைப் போல - அண்ணாவைப் போல - கலைஞரைப் போல,... சேர்ந்திருக்கிற ஸ்டாலின் அவர்களை, அந்த மூவருடைய புகழும் -மூவரின்பெயரும் - மூவரும் செய்திருக்கிற சாதனைகளும் - உங்களிடத்தில் வரவேண்டும். அதற்கான பலம் உங்களிடத்தில் இருக்கிறது. நீங்கள் வெறும் ஸ்டாலின் அல்ல, பெரியாரும் - அண்ணாவும் - கலைஞரும் கலந்த ஸ்டாலின். எனவே, உங்களிடத்தில் நான் இருகரம் கூப்பி, மக்களுடைய சார்பில் - பெரியாருடைய சார்பில் - அண்ணாவின் சார்பில் - கலைஞர் சார்பில்,அவர்கள் நினைத்ததை எல்லாம் நிறைவேற்றி கொடுங்கள். அவர்களுடைய கனவுகள், 100 வருடங்களாககாத்துக்கொண்டிருக்கிறது. இந்த வேகத்தில் இந்தக் காரியங்களை எல்லாம் செய்து, இருண்டிருக்கும் பகுதியில்ஒளிமயமாக உதயசூரியன் உதிக்க வேண்டும்; அதற்கு நீங்கள் காரணமாக இருக்க வேண்டும்.

இவ்வளவு விஷயங்கள் செய்தாயிற்று. இவ்வாறு செய்த விஷயங்களை எல்லாம் மக்களிடத்தில் கொண்டு சென்று சேர்த்து, இவ்வளவு சாதனைகள் செய்திருக்கிறார். இன்னும் தொடர்ந்து அந்தச் சாதனைகள் தொடர வேண்டுமானால், நம்முடைய மரியாதைக்குரிய ஸ்டாலின் 2026-இலும் முதலமைச்சராக வரவேண்டும். அவ்வாறு வந்து,'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' பதவி ஏற்கிறேன் என்று சொல்ல வேண்டும். அதற்கெல்லாம் நீங்கள் துணையாக இருக்க வேண்டும் என்று கேட்டு, மீண்டும் ஒருமுறை நம்முடன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்க- வாழ்க, அவர்களுடைய தொண்டுகளும் - சேவைகளும் தொடர வாழ்த்துகிறோம் - வாழ்த்துகிறோம் என்று சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு இயக்குனர் எஸ்.பி.முத்துராமன் பேசினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.எம். கண்ணபிரான்
ஏப்ரல் 1 (1975)

பள்ளிப்படிப்பின்போதே தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். திராவிடர் கழகத்தில் வண்ணைப் பகுதியில் முக்கிய செயல்வீரராக செயல்பட்டவர்.

தி.மு.க. துவங்கியதும் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். திரு. என்.வி. நடராசன் அவர்கள் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தபோது இவர் மாவட்டத் துணைச் செயலாளராக பணியாற்றியவர். பின்னர், சென்னை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

கழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய போராட்டமான மும்முனைப் போராட்ட காலத்தில் தலைநகர் சென்னையின் மாவட்டச் செயலாளராக இவர் ஆற்றிய பணிகள் மும்முனைப் போராட்டத்தைப் போலவே முக்காலமும் மறையாத அற்புதத் தொண்டாகும்.

தந்தை பெரியார் அவர்களிடமும், பேரறிஞர் அண்ணா அவர்களிடமும் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்களிடமும் அன்பு கொண்டவர்.

"கழகம்! கழகம்!! அது ஒன்றே அவரது உயிர் மூச்சோடு சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது" என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்பு கடிதத்தில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.